# அவர் ஒரு மனிதனைக் காட்டிலும் மேலானவராக இருந்தார்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **கிறிஸ்துவின் ஊழியம்**, ஜுன் 7, 1953, கானர்ஸ்வில், இந்தியானா, அமெரிக்கா

---

சில வருடங்களுக்கு முன்பு, ஒரு நபர் என்னிடம், "சகோதரன் பிரன்ஹாமே, அந்த மனிதர் தெய்வீகமானவர் என்று நீங்கள் விசுவாசிப்பதாக என்னிடம் கூற விரும்புகிறீர்களா?" என்று கூறினாள்.

நான், "ஆம், ஐயா" என்றேன்.

"அவர் ஒரு மனிதன் மாத்திரமே என்று என்னால் நிரூபிக்க முடியும்" என்றாள்.

நான், "அவர் மனிதனை விட மேலானவர்" என்றேன்.

"ஓ," அவள், "அவர் — அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார்" என்றாள். இங்கேயுள்ள கொஞ்சம் மேலோட்டமான இந்தப் போதகத்தைத்தான் இன்றைய ஜனங்கள் பெற்றுள்ளனர்.

"சகோதரனே, அவர் — அவர் தேவனாகவோ அல்லது ஒரு வஞ்சகராகவோ இருந்தார்; அவர் ஒரு பொய்யராக இருந்தார்" என்றாள்.

70. அவர் (அவள்), "ஏன், சகோதரன் பிரன்ஹாமே, அவர் தெய்வீகமானவராக இல்லை. அவரால் அவ்வாறு இருக்க முடியவில்லை. அவர் தெய்வீகமானவரல்ல என்று வேதாகமத்தைக் கொண்டு என்னால் உங்களுக்கு நிரூபிக்க முடியும்" என்றாள்.


நான், "நீ வேதாகமத்தைக் கொண்டு அதை நிரூபித்தால், நான் அதை ஏற்றுக் கொள்வேன்" என்றேன்.



அவள், "சரி" என்றாள். அவள், "பரிசுத்த யோவான் 11ம் அதிகாரத்தில், இயேசு லாசருவுடைய கல்லறையண்டை போன போது,

அவர் அழுததாக வேதாகமம் கூறுகிறது. அவர் ஒரு மனிதனாய் இருந்ததை அது நிரூபிக்கிறது; ஒரு மனிதனைப் போன்று அவர் அழுது கண்ணீர் விட்டார்" என்றாள்.

நான், "நிச்சயமாக அவர் அழுதார், ஆனால் அவர் தேவன் – மனிதனாக இருந்தார். அவர் லாசருவுடைய கல்லறையண்டை போன போது, அவர் ஒரு மனிதனைப் போல அழுதிருக்கலாம், ஆனால் ஒரு மனிதன் மரித்து, அழுகிப் போய், நான்கு நாட்களாக கல்லறையில் படுத்திருந்த போது, அவர் கல்லைப் புரட்டினார், சுற்றிலும் எல்லாவிடங்களிலும் துர்நாற்றம் வீசியது, அவர் அங்கே நின்றார், அழுது கொண்டிருந்த அதே மனிதர் உரைத்தார், 'லாசருவே, வெளியே வா' என்றார். மரித்து நான்கு நாட்களான ஒரு மனிதன் – **அவனுடைய ஆத்துமா நான்கு நாட்களாக எங்கோ பிரயாணம் போயிருந்தது**, அவன் உயிர்த்தெழுந்து காலூன்றி நின்ற போது, **அவர் ஒரு மனிதனைக் காட்டிலும் மேலானவராக இருந்தார்**. அது தேவன் தம்முடைய குமாரன் வழியாக பேசுவதாகும். அவர் தேவன் – மனிதராக இருந்தார்" என்றேன்.



71. அவர் அந்த இரவு நேரத்தில் அங்கே நின்றிருந்த போது, நிச்சயமாக அவர் ஒரு மனிதனாக இருந்தார், அந்த மலையின் மேல் முழு இரவும் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருந்தார்.



அடுத்த நாள் அவர் கீழிறங்கி வந்து, அந்த மரத்தின் மேல் நோக்கிப் பார்த்து ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா என்று காண முயற்சித்துக் கொண்டிருந்தார், அங்கே அத்திப் பழமே இல்லாதிருந்தது – சாப்பிட அவருக்கு அங்கே எதுவுமேயில்லை, அந்த மரத்தில் அத்திப்பழமில்லை. அவர் பசியாயிருந்த போது, அவர் ஒரு மனிதனாக இருந்தார்.



**ஆனால் அவர் ஐந்து அப்பங்களையும் இரண்டு சிறு மீன்களையும் எடுத்து, 5000 பேரை போஷித்த போது, அது ஒரு மனிதனைக் காட்டிலும் மேலானதாக இருந்தது**, அது தேவன் தம்முடைய குமாரனில் இருந்ததாகும். சரி.




அவர் மிகவும் களைப்படையும் வரையில் நாள் முழுவதும் பிரசங்கித்துக் கொண்டும், சுகமளித்துக் கொண்டும் இருந்த பிறகு, அவர் அந்த படகில் படுத்திருந்த போது, அந்த இரவில் அவர் ஒரு மனிதனாக இருந்தார். சமுத்திரத்திலிருந்த பத்தாயிரம் பிசாசுகள் அந்த இரவு நேரத்தில் அவரை மூழ்கடித்து கொன்று போட்டு விட வேண்டுமென்று சூளுரைத்திருந்தன. அந்த சிறு படகானது கடலில் ஒரு குப்பியின் மூடியைப் போல அங்கிருந்த போது, பிசாசு, “நாம் இப்பொழுது அவரைப் பிடித்துக் கொண்டோம்” என்றது. அது இவ்விதமாக மேலும் கீழுமாக

அசைந்து கொண்டிருந்தது, அவரோ நன்றாக தூங்கிக்கொண்டிருந்தார், அவர் களைப்புற்றிருந்தார், அவரை எதுவும் தூக்கத்தை விட்டு எழுப்பவும் கூட இல்லை.




ஆனால் அவர் – சீஷர்கள் அவரை எழுப்பிய போது, அங்கே படுத்து தூங்கிக் கொண்டிருந்த போது, அவர் ஒரு மனிதனாக இருந்தார், **ஆனால் அந்த படகின் கப்பற்பாயின் நுனிக்கயிற்றின்** (brail) **மேல் தம்முடைய காலை வைத்தபடி,** **"இரையாதே, அமைதலாயிரு"** **என்று கூறின போது. காற்றும் அலைகளும் அவருக்குக் கீழ்ப்படிந்தன...** அல்லேலூயா. நீங்கள் இதை விசுவாசிக்கிறீர்களா? ஆம், ஐயா.

72. அவர் கல்வாரியில் தொங்கியபடி, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்?" என்று இரக்கத்துக்காக கதறி சத்தமிட்டபோது, அவர் ஒரு மனிதனாக இருந்தார்.



மேலும் அவருடைய சரீரத்தின் ஒவ்வொரு தசையும் நடுங்கிக் கொண்டிருந்தவாறு, ஜீவனுடைய இரத்தமானது கீழே சொட்டு சொட்டாக விழுந்து கொண்டிருந்த போது, அவர் ஒரு மனிதனாக இருந்தார். அவர்கள் அவரை அடக்கம் செய்தனர், அவர் ஒரு மனிதனைப் போன்று மரித்தார்.

**ஆனால் அவர் ஈஸ்டர் காலையன்று உயிர்த்தெழுந்த போது, அவர் மனிதனைக் காட்டிலும் மேலானவராக இருந்தார். அவர் தாம் தேவன் என்பதை நிரூபித்தார். அல்லேலூயா.**



**ஒரு ஸ்திரீ அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். பரிபூரணமாக சுகமடைந்தாள்.** நீங்கள் இதை விசுவாசிக்கிறீர்களா? **இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன்.** நீங்கள் இதை விசுவாசிக்கிறீர்களா? அவர் பூமியில் இருந்த போது செய்த அடையாளங்களும் அற்புதங்களும்

இங்கே இரவும் பகலும் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன்? நீங்கள் இதை விசுவாசிக்கிறீர்களா?

★★★★★

